Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (7-5-66) இதழ் 89

பராபவ சித்திரை 24 முஹர்ரம் பிறை 15 சனிக்கிழமை

**பீடிகளில் சிறந்தது!**

பீடி உலகில்
சிறந்து விளங்குவது
**முல்லா பீடிகளே**

தயாரிப்பாளரும்
வுநியோகஸ்தர்களும்:
**முல்லா பீடி கம்பனி**
கே.கே.எஸ். ரோட் - யாழ்ப்பாணம.

### செவ்வாயில் சீன அணுகுண்டு

டோக்கியோ, மே 6

வருகிற செவ்வாய்க்கிழமை சீன தனது 3-வது அணுகுண்டை வெடிக்கும் என டோக்கியோவில் ஜப்பானிய அதிகார் ஒருவர் கூறினர். சீனவில் நடக்கும் ஆயத்தங்கள் இதை நிரூபிப்பதாய் இருப்பதாக மந்திரி சபைக் கூட்டம் ஒன்றுக்குப் பின் அவர் கூறினர்.

# வினாத்தாள்களினால் விளைந்த மோசம்!

## தமிழ் தட்டெழுத்து பரீட்சை ஒத்திவைப்பு

### எழுத்துக்கள் தெளிவில்லாமல் இருந்ததின் விளைவு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் அரசாங்க கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியில் முதல் வருடத் தமிழ் வணிக மாணவர்களுக்கான தமிழ் தட்டெழுத்துப் பரீட்சைகள், நேற்றுக் காலை கடைசிநேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது.

சென்ற மாதம் 26-ந்திகதி ஆரம்பமான இவர்களின் பரீட்சைகள் நேற்றுடன் முடிவடைவதாக விருந்தது. ஆரம்பத்தில் பத்து நிமிட வேகப்பரீட்சை முடிந்ததும் அடுத்த கேள்விகளுக்கான வினாத்தாள்கள் சுமார் அரை மணித்தியாலம் வரை விநியோகிக்கப்படவில்லை எனக் கூறப்பட்டது. பரீட்சாதிகாரிகள் சிறிது நேரத்தில் விடை எழுதுவதற்காகக் கொடுத்த வெள்ளைத்தாள்க

(6-ம் பக்கம் பார்க்க)

## 'உலகவங்கி உதவிக்கு வழிகோலியுள்வது'

### வெளிநாட்டு விஜயம்பற்றி பிரதமர்

கொழும்பு, வெள்ளி

இலங்கைக்கு உதவி கிடைப்பது குறித்து உலக வங்கி எதிர் மாருன முடிவுக்கு வராதவண்ணம் தமது வெளிநாட்டு விஜயத்தின் போது நடவடிக்கை மேற்கொள்ள முடிந்தது என்று பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா இன்று அரசாங்க கட்சி பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் மத்தியில் பேசும் போது கூறினர்.

வெளிநாட்டு அரசியல் தலைவர்களோடும் தாம் பேச்சுவார்த்தைகள் நடத்தியதாக அவர் கூறினர். கடந்த ஆண்டு நாட்டில் ஸ்திர நிலைமை நிலவியது குறித்தும் மொழித்தகராறில் சமரசம் ஏற்பட்டிருப்பது குறிந்தும் தாம் வெளிநாடுகளில் வலியுறித்தியதாகவும் இந்தப் பேச்சுக்கள் வெளி உதவிகளுக்கு வழிகோலியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## 'தனிப்பட்ட செல்வாக்கை உபயோகிக்கவில்லை'

### டெடிகம தேர்தல்வழக்கில் டட்லி சாட்சியம்

கொழும்பு, வெள்ளி

'கடந்த தேர்தலில் என்னை எதிர்த்துப் போட்டியிட்ட ரத்னதேசப்பிரியா பற்றி தனிப்பட்ட முறையில் நான் தாக்கிப்பேசவில்லை. மிகப் பெரிய 'பிளாக்மார்க்கெட்' காரர் என்றும் குறிப்பிடவில்லை. கூட்டுறவு மொத்த விற்பனைஸ்தாபனத்துக்குரிய பொருட்கள் கள்ளச் சந்தையில் விற்கப்படுகின்றன என்றுமட்டும் நான்கூறி து உண்டு' இவ்வாறு நேற்று டெடிகம தேர்தல் ஆட்சேப வழக்கு பிரதம நீதியரசர் திரு. சன்சோனி முன்னிலையில்விசாரணைசெய்யப்பட்ட போது பிரதம மந்திரி திரு. டட்லிசேனநாயகா சாட்சியமளிக்கையில் கூறினர்.

இந்தவழக்கில் திரு. டட்லி சேனநாயகா டெடிகம தொகுதியில் பார்லிமெண்டுக்கு தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து ரொமியல் பெரேரா என்பவர் வழக்கு தொடர்ந்துள்ளார்.

திரு. டட்லி சேனநாயகா குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது, தமதுதொகுதியில் தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்த முற்படவில்லையென்றும் எதிர் தரப்பில் அப்படி செல்வாக்கு பயன்படுத்தப் படுவதாக தமது சகோதரர் அடிக்கடி புகார்செய்ததாகவும், தேர்தல் காலத்தில் அதிகமான நேரத்தைத்தாம் மற்ற தொகுதிகளிலேயே செலவிட்டதாகவும் வாரஇறுதிகளில்தான் தமதுதொகுதியில் இப்படி வழக்கம் என்றும் சொன்னர்.

தேர்தல் காலத்தில் ஆயிரம் சொற்பொழிவுகள்தாம் நடத்தியிருப்பதாகவும் எனவே எதை எதைச் சொன்னேம் என்பதைக் குறிப்பாகச் சொல்லமுடியாதென்றும்பிரதமர்குறிப்பிட்டார்,

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் நிலவும் ஊழல்கள்குறித்து விசாரிக்க தாம் பதவிக்குவந்தால் கமிஷன் நியமிப்பதாக பல கூட்டங்களில் வாக்குறுதியளித்ததாகவும் அவர் கூறினர்.

## துணிகர பகற் கொள்ளை

கொழும்பு, வெள்ளி

இன்று கொழும்புத் துறைமுகப் பகுதியில் ஒரு துணிகரப் பகற்கொள்ளை நடைபெற்றுள்ளது.

காஷியர் ஒருவரின் முகத்தில் மிளகாய்ப் பொடியை வீசிவிட்டு அவரிடமிருந்து மூவாயிரம் ரூபாவைக் கொள்ளையடித்துக் கொண்டு திருடர்கள் ஓடிவிட்டனர்.

## 9,700 தொன் அரிசிக் கப்பல்

### காங்கேசன்துறை வந்துள்ளது

மாவிட்டபுரம், வெள்ளி

''எஸ் எஸ் பெனுமி'' என்ற பாங்ஹாக் கப்பலொன்று 9700 தொன் அரிசியுடன் காங்கேசன்துறைதுறைமுகத்துக்கு இன்றுமாலை வந்தது. அரிசி இறக்குமதிவேலைகள் நாளை சனிக்கிழமை காலை ஆரம்பமாகும்,

இக்கப்பலிலுள்ள அரிசி வடமாகாணத்துக்கு மட்டுமே விநியோகிக்கப்படும்,

இக்கப்பல் சுமார் இருவார காலம்வரை இங்கு தங்கியிருக்குமென்றும் இறக்குமதி வேலைகளை யாழ் மாவட்ட கூட்டுறவு துறைமுகத் தொழிலாளர் யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்கள் செய்வார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது, இறக்குமதி வேலைகளில் ஆயிரம் தொழிலாளர்கள் ஈடுபடுவார்கள்,

இக்கப்பலின் ஏஜண்டுகள்! மெஸர்ஸ் கே. ஜெயபாலசிங்கம் கம்பெனியாகும் இவ்வருடத்தில் கே கே எஸ் துறைமுகத்துக்கு வந்த முதலாவது உணவுக்கப்பல் இதுவாகும்,

## 411 பேர் விடுதலை

கல்கத்தா, மே 6

81 இடதுசாரிகம்யூனிஸ்ட் உட்பட 411 பேரை தடுப்புக்காவலில் இருந்து விடுவிக்குமாறு மேற்கு வங்கம் உத்தரவிட்டது

## "நாடு விரும்பினுல் கவர்னர் ஜெனரலாவேன்'

### லண்டனில் சர் ஜோன் பேட்டி

லண்டன், மே. 6

''கவர்னர் ஜெனரலாக வருவதில் நான் அதிக குறியாக இருக்கவில்லை. ஆனுல் நாடு விரும்பினுல் பதவி வகிப்பதில் தடையில்லை'' என சர். ஜோன் கொத்தலாவலை கூறினர்,

லண்டன் 'டெய்லி டெலிகிருப்'' பத்திரிகையில் இலங்கையில் அடுத்த கவர்னர் ஜெனரல் பதவிபற்றி எழுதியிருந்த கட்டுரை சம்பந்தமாக இவரிடம் கேட்கப்பட்டது.

அடுத்த கவர்னர் ஜெனரலாக திரு, டட்லி சேனநாயக்கா வருவார் என்றும்ஒரு ஊகம் அதில்குறிப்பிடப்பட்டிருந்தது.

''அங்கு என்ன நடக்கிறது என்பதைப்பற்றியோ, கவர்னர் ஜெனரலாக யார் வருவார் என்பது பற்றியோ எனக்கு அக்கறை கிடையாது. நான் இலங்கையின் பிரதம மந்திரியாக இருந்தேன். ஒருகவர்னர் ஜெனரலை நான் நியமித்தேன் எனக்கு அந்த வேலையைச் செய்வதில் அக்கறைஎதுவும் கிடையாது. ஆனுல் தேசப் விரும்பினுல்கவர்னர் ஜெனரலாகத் தயார்'' என்றுர் சர் ஜோன்.

(6-ம் பக்கம் பார்க்க)

புகைபிடிப்பது தடைசெய்யவேண்டும் ★ இடவசதியைப் பொறுத்து டிக்கட்டுகள் வழங்குவது ★ கலர்க்கு வசதியான வாங்குகள்

## யாழ்ப்பாண தியேட்டர்கள்கமிட்டி தீர்மானங்கள்

### விரைவில் அமுலாக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம் சனி,

யாழ்ப்பாணத்திலுள்ள தியேட்டர்களில் புகைப்பதற்கு தடை விதிப்பதுடன் இங்கு சினிமா பார்ப்பவர்களுக்கு சுகாதாரத்துடன் கூடிய சகல வசதிகளுமளக்க தியேட்டர் மனேஜர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மேயர் திரு ஏ ரி துரையப்பா தலைமையில் நேற்று பிற்பகல் நடைபெற்ற தியேட்டர்கள் கமிட்டிகூட்டத்தில் மேற்கண்ட முடிவுகளுடன் பல தீர்மானங்களும் செய்யப்பட்டன. இக்கூடடத்துக்குதியேட்டர் மனேஜர்கள், சுகாதார வைத்திய அதிகாரி, மாநகர [illegible], சுகாதார அதிகாரிகள், உதவி மேயர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றபட்ட தீர்மானங்கள் வருமாறு:

○ தியேட்டர்களில் குறிப்பிடப்பட்டதொகைக்கு அதிகமாக டிக்கெட்டுகள் விற்பனை செய்யக்கூடாது. இடவசதிகளைப் பொறுத்து டிக்கட்டுகள் விற்பனை செய்ய வேண்டும். ○ சுகாதார வைத்திய அதிகாரியின் சிபார்சின் பேரில் வகுப்புகளுக்கு ஆசனங்கள் ஒதுக்கப்படவேண்டும். ○ கலரிக்கு வாங்கு போடுவது இம்மாதத்துடன் தடைசெய்யப்பட்டு வசதியான சாய்மான வாங்குகள் போட வேண்டும். ○ மலசல கூடம் சுகாதார முறைப்படி அமைக்கவேண்டும். ○ குடிதண்ணீர் வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். ○ ஒரு மணிக்கு முன்னர் இரண்டாவது

(6-ம் பக்கம் பார்க்க)

**நகைகளுக்கு யப்பான் ஜுவலர்ஸ்**
64, கன்னதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518
தந்தி: 'யப்பான்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நமது மனதைச் சுத்தமாக வைத்துக்கொள்ள இரவுபகலாகப் போராடுகிறோம். முடியவில்லை பல கெட்ட எண்ணங்களும் ஆசைகளும் வந்து துன்புறுத்துகின்றன. ஆனால் இறைவன் பெயரை உள்ளத்தால் கூறி, அவரது அருள் சுரந்ததும், தீயநினைப்புகளெல்லாம் மறைந்து மனம் சுத்தமாகிறது.

— சுவாமிராமதாஸ்

ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna; Phone: 315

ஈழநாடு பராபவ ஆண்டு சித்திரை மீ 24உ (7-5-66)

# இலங்கையின் எதிர்காலம்

இலங்கையின் எதிர்காலம் மிகமேலாக இருக்கப் போகிறதென்ற நம்பிக்கை சமீப மாதங்களில் பலப்பட்டிருப்பதாக நம் கைத்தொழில் அமைச்சர் திரு. பிலிப்குணவர்த்தன லண்டனில் தெரிவித்துள்ளார். அவரது நம்பிக்கை நிறைவேற வேண்டுமென்பதே இங்கு எல்லாருடைய பிரார்த்தனையுமாகும்.

நீர்வளம், நிலவளம், ஆள்பலம் எல்லாம் அமோகமாக இந்நாட்டில் உள்ளன. இயற்கை அன்னையின் கருணை இவ்வளவு அதிகமாக இருந்தும், மந்திரியின் கூற்றுப்படி நாம் நமது அரிசித் தேவையில் நூற்றுக்கு 43 விகிதம் பிறநாடுகளை எதிர்பார்த்திருக்கின்றோம். நெல் வயல்களுக்கான உரத்தை இறக்குமதி செய்கின்றோம். உடைத் தேவைகளுக்கான பெரும் பகுதிக்கும் பிறநாடுகளையே எதிர்பார்த்துள்ளோம். நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டபடி, நமக்குத் தேவையான எல்லா சீனியையும் இங்கேயே உற்பத்தி செய்யலாமென்றாலும் அதற்கும் கூட பிறர்தயவையே நாம் நாடுகின்றோம். உணவு, உடை உற்பத்தியில் ஓரளவு அபிவிருத்தி ஏற்பட்டிருப்பினும், நாட்டின் தேவையுடன் ஒப்பிடுகையில் இது மிகமிகக் குறைவேயாகும்.

அபிவிருத்தி குறைவாக இருப்பதற்கு அமைச்சர் ஒரு முக்கிய காரணம்கூறுகின்றார். உரத்தொழிற்சாலை, தேயிலைப்பெட்டித் தொழிற்சாலை முதலியவற்றுக்கு மெஷின்கள் அதிகம் தேவைப்படுவதாயும், ஆனால் அவற்றை வெளிநாடுகளிலிருந்து வாங்குவதற்குப் போதிய பணவசதி இல்லை என்கிறார். தேயிலை, ரப்பர் முதலிய நமது முக்கிய ஏற்றுமதி சென்ற ஆண்டில் அதிகரித்திருப்பினும், அவற்றுக்குக் குறைந்த விலையே கிடைப்பதாயும், அதனால்தான் நமக்கு அவசிய தேவையான மெஷின்கள் வாங்குவதற்குப் போதிய பணவசதியில்லாதிருப்பதாகவும் மந்திரி விளக்கியுள்ளார்.

அதாவது பலதுறைகளிலும் நம்நாடு அபிவிருத்தியடைய வேண்டுமாகில், நமக்கு வெளிநாடுகளிலிருந்து புதிய மெஷின்கள் தேவைப்படுகின்றன. நமது விளைபொருள்களுக்கு வெளிநாடுகள் நியாயமான விலைகொடுப்பதாயின் நமது குறை நீங்க முடியும். ஆனால் வெளிநாடுகள் நமது விளைபொருள்களுக்கு நியாயமான விலை நிர்ணயிக்க மறுப்பதுடன், அவர்களிடமிருந்து நாம் வாங்கும் சரக்குகளின் விலையைப் பெரிதும் அதிகரிக்கின்றன. இவ்விதம் இருவிதங்களிலும் பாதிக்கப்பட்டிருக்கும் நாம், இப்பிரச்னையை வெற்றிகரமாக எப்படிச் சமாளிப்பது என்றகேள்விக்கானபதிலிலேயே நமது எதிர்கால சுபீட்சமும் அடங்கியிருக்கும்.

நம் பிரதமர் உள்ளிட்டு பல அமைச்சர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று உதவியை நாடுவதாயும், உதவி அளிப்பதாக உறுதிகள் கிடைத்துள்ளதாகவும் செய்திகள் கூறுகின்றன. அவ்வுதவிகள் வருவதாயின் அவற்றை நாம் நன்றியுடன் வரவேற்கலாம். ஆனால் அவற்றையே நாம் முழுதும் நம்பி இருப்பது பத்திரமாகாது. மேலும் நமக்கு உதவியளிப்பவர்கள், பிரதிபலன் கருதாமல் அப்படிச் செய்யார். நமது கைத்தொழில்கள் அபிவிருத்தியடைந்தால், தங்கள் வியாபாரம் அதனால் பாதிக்கப்படுமென்ற கவலையும் அவர்களுக்கு இருக்கலாமென்பதையும் நாம் மறப்பதற்கில்லை. இந்நிலையில் நமது விளைபொருள்களுக்கு நியாயமான விலையை நிர்ணயித்து அளித்தால் அது வெகுதூரம் உதவியாக இருக்கும். ஆனால் அதுகூடக் கிடைக்குமா என்பது சந்தேகம்.

இந்நிலையில் நாம்என்ன செய்ய வேண்டுமென்பதே கேள்வி. உதவிக்காக வெளிநாடுகளுக்குச் சென்று நம் மந்திரிகள் பிச்சை கேட்பது நாட்டின் மதிப்பைக் குறைக்குமென்றும், நமது தேசியப் பிரச்னையைத் தீர்க்க இது வழியல்லவென்றும், இங்குள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி, நமது தேவைகளைக் கூடுமானவரை நாமே பூர்த்திசெய்து கொள்ள வேண்டுமென்றும், தன் கையே தனக்கு உதவி என்றும் முன்னாள் நீதிஅமைச்சர் ஹேமா பஸநாயக்கா ஒரு கூட்டத்தில் பேசுகையில் இடித்துக் கூறியுள்ளார். பிறரிடமிருந்து கிடைக்கும் உதவிகளை நாம் மறுக்கத் தேவையில்லை. ஆனால் அதையே பெரிதும் நம்பி இருப்பது சரியாகாது. நமக்குத்தேவையான உணவு, உடை முதலியவற்றை இங்கேயே நாம் உற்பத்தி செய்து கொள்ள நம்மால் எவ்வளவுதூரம் முடிகிறதோ அவ்வளவும் நல்லதாகும்.

இங்கு தேவையான உழைப்பாளிகள் உண்டு. அந்தச் செல்வம் கிடைத்துள்ளது நமது அதிர்ஷ்டமென்றே கூற வேண்டும். சாதி, இனம், மொழிமுதலிய வேற்றுமைகளைப் பாராமல், நமது செல்வத்தைப் பெருக்கத் தயாராகவுள்ள எல்லா மக்களையும் நாம் பயன்படுத்த வழிசெய்தால் நம்மையே கூடுமானவரை நாம் நம்பி வாழ்ந்தால்தான் நம் எதிர்காலத்தைப்பற்றி நாம் அதிக நம்பிக்கையுடன் இருக்க முடியும்.

# கல்வியறிவும் கலையறிவும்

— ரவீந்திரநாத் தாகூர் —

[வங்கம் தந்த உலக மகாகவி ரவீந்திரநாத் தாகூரின் பிறந்த தினம் இன்று உயிரோடிருப்பாராகில் அவருக்கு இன்று 105 வயது]

நான் பிறந்த பொழுது வங்காளத்தில் ஒரு புது யுகம் தோன்ற ஆரம்பித்துவிட்டது. பழைய யுகம் முற்றாக அணையாவிட்டாலும் மங்கிக் கொண்டே போனது. அதில் இருந்த பல விஷயங்கள் மூப்பினால் உழுத்துக்கொண்டிருப்பதை நான் கண்டேன். அவற்றுள் ஒன்று அக்காலத்துச் சமுதாய வாழ்வில் சங்கீதத்துக்கு இருந்த மதிப்பு.

சங்கீதத்தில் திறமை பண்பாட்டின் அறிகுறி என்று அப்பொழுது கருதப்பட்டு வந்தது. எழுத்தில் இலக்கணப்பிழை இருந்தால்எப்படி அதை அறிவிலித்தனம் என்று கருதினோமோ, அதேபோல உயர் குலத்தில் பிறந்த ஒருவர் சங்கீதக்கச்சேரியில் தப்புத்தாளம் போட்டால் அவரைப் பண்பாடில்லாதவர் என்று ஒதுக்கிவிடுவோம். மரபுச் சின்னத்துக்கு அது ஒரு கறை போலிருந்தது. பிற ஊர் சங்கீத விற்பன்னர்களை வரவழைத்து கச்சேரி செய்விப்பது சுயமரியாதையுள்ள பிரபுக்களின் கடமை எனக் கருதப்பட்டது. உண்மையில், அறிவுக்கலைகளின் எல்லாப் பகுதிகளும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவையே என்று சமுதாயம் கருதியது. பிரபுக்கள் அதைத் தமது உன்னதமான பணியென்று நம்பினார்கள். தாங்களாகவே சுமத்திக்கொண்ட இந்த பொறுப்பினால்தான் உயர் கல்வி நிலையங்கள் பேணப்பட்டு வந்தன. சமூகத்தின் ஒளிகள் யாவும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் பெரிய கூட்டுறவுப் பணியில் ஒரு செல்வந்தர் ஒத்துழைக்கத் தவறினால் அவருடையசெல்வம் தூஷிக்கப்பட்டது. சரஸ்வதி லட்சுமியின் வாயிலில் நின்று பிச்சை கேட்கவில்லை. அதற்கு மாறாக லட்சுமியே சரஸ்வதியிடம் போய் இரந்தான்.

ஆகவே பிரபுக்கள் தங்கள் மதிப்பை பாதுகாக்கும் பொருட்டு இசையின் மதிப்பையும் பாதுகாத்து வந்தவர். அது அவர்களுடைய சமூகப் பணியாய் இருந்தது அக்காலத்தில். சங்கீதம் ஒரு மதிப்புக்குரிய கலையாக இருந்து வந்தது.

பிற்பாடு நாட்கள் செல்லச் செல்ல நான் ஒரு புது யுகத்துக்குள் நுழைந்தேன். இங்கே, பையன்கள்எல்லோரும் கல்லூரிப் பட்டங்களில் கண் வைத்துக்கொண்டு பாடக் குறிப்புகளை மனனம் செய்துகொண்டிருந்தார்கள். இசையறிவு ஒரு மேம்பட்ட லட்சியம் என்ற எண்ணம் சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது. சங்கீதவித்வான்களுக்கு நிழலும் போஷாக்கும் அளித்த தனவந்தர் வீடுகளில் பள்ளிக்கூடப்புத்தகங்கள் நெட்டுரு செய்யப்பட்டன. அக்காலத்துவாலிபர்கள் முழுக்க முழுக்க சங்கீதத்தையே தொழிலாகக் கொண்ட இசையாளரோடு புனிதமான சங்கீதத்தையும் ஒருதவறுதலாகப் பிணைத்து அதன் தூய்மையை பலவித வர்ணப் பூச்சுக்களினால்மாசுபடுத்தனர். வங்காளத்தில் கல்விப்பகுதி சங்கீதத்தையும் பள்ளிக் கூடப்பாடமாக சேர்க்கவில்லை. எனவே, சங்கீத அறிவு இல்லாவிட்டாலும் படித்தவகுப்பினர் அதைஒருகுறைபாடாகவோ வெட்கப்படவேண்டிய விஷயமாகவோ கருதவில்லை.

எங்கள் குடும்பத்தில் பரீ[illegible] புக்குரிய விஷயமாக எண்ணப்படவில்லை. எனதுசகோதரர்களில் இரண்டொருவர் பல்கலைக் கழகத்தை எட்டிப்பார்த்துவிட்டு பட்டமில்லாமல்திரும்பிவிட்டார்கள். அவர்கள்செய்தது சரி என்று நான் கூறவில்லை. ஆனால் அதன் பயனாக பட்டம்தான் படிப்புக்கு அறிகுறி என்ற குருட்டு வேதாந்தத்திலிருந்து நாம் தப்பிவிட்டோம். என் சகோதரர்கள் இரவு பகலாக தத்துவார்த்தம் பேசுவார்கள். இலக்கியத்திறனாய்வு செய்வார்கள். ஓவியக்கலை விமர்சனம் செய்வார்கள். எம்மில் எவருக்காவது நாடகம் நடிப்பதில் சற்றேனும் கூச்சமில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக சங்கீதமே எங்கள் வீட்டில் ஆட்சி புரிந்தது.

கல்வியறிவுள்ள படித்தவர்கள் இயற்கையாகவே கலைக்கு மதிப்புக் கொடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை எங்கள் வித்தியாபகுதியினர் உருவாக்க வேண்டுமென்பதற்காகவே இதை நான்கூறுகிறேன். என்னைப் பொறுத்தமட்டில் எத்தனையோ இடையூறுகளுக்கிடையே என் சொந்த நிறுவனத்திலேயே (சாந்தி நிகேதன்) ஆகவேண்டியன செய்துவருகிறேன்.

மனிதன் விஞ்ஞான உண்மைகளை மட்டும் கண்டுபிடிக்கவில்லை. விவரிக்கமுடியாத வேறு உண்மைகளையும் கண்டுவிட்டான். எழுத்திலும், இசையிலும், வரைதலிலும் வர்ணத்திலும், தாளத்திலும் கோலத்திலும் அவன் கண்ட பூரணத்துவத்தை அழிவற்ற சொல்லோவியங்களில் சித்தரித்திருக்கிறான் அவற்றை நமது மாணவர்களும் அனுபவித்து உணரவேண்டும். இன்பநுகர்ச்சிக்காக மட்டுமல்ல அழகுள்ளதைக் கண்டோம், விழுமியதைப் பருகிறோம், நேசிக்கக்கூடியதை நேசித்தோம் என்று வெளியுலகத்துக்கு எடுத்துக்கூறும் உரிமையையும் அதிகாரத்தையும் பெறுவதற்காக.

## மத்திய விஞ்ஞான கூடம்

திருகோணமலை, வெள்ளி

திருகோணமலைக்கு ஒரு மத்திய விஞ்ஞானகூடம் நிறுவுதற்கான ஒழுங்குகளை கல்விப்பகுதியினர் மேற்கொண்டுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை, பொலநறுவா போன்ற இடங்களில் உள்ள அடிப்படையில் இவ்விஞ்ஞானகூடம் அமைக்கப்படுமெனத் தெரியவருகிறது.

## ஊழியர்கள் முறைப்பாடு

மன்னார், வெள்ளி

'மன்னார் வர்த்தகஸ்தாபனங்களில் வேலை செய்யும் ஊழியர்கள் தங்களுக்கு மற்றைய இடங்களிலுள்ள ஊழியர்களுக்கு வழங்கப்படுவதுபோல ஒன்றரை நாள் விடுமுறை கொடுக்கப்படுவதில்லை' என சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

## தங்க கட்டுப்பாட்டை ரத்துச்செய்க

புதுடில்லி, மே 6

தங்கக்கட்டுப்பாட்டு உத்தரவை ரத்துச்செய்யுமாறு எம். பி.க்கள் அரசாங்கத்துக்கு மகஜர் ஒன்றை அனுப்பியிருக்கிறார்கள்.

# ஐயாறன் எழுதுகிறார்

நேற்றுக்காலை ஒரு பெண்மணி வந்து இ. போ. ச. வைப் பற்றி ஒரு புகார் செய்தார் கொக்குவிலுக்குப் பக்கத்து பஸ் ஸ்டான்டிலே காலை 7-30க்கு வந்து காத்திருந்ததாயும், ஒரு பஸ்ஸிலும் இடம் கிடைக்கவில்லை என்றும் 9-30 மணிக்குத்தான் பஸ் ஏறி யாழ்ப்பாணம் வரமுடிந்ததென்றும் சொன்னார்.

இதைப் பற்றி இ. போ. ச. அதிகாரிக்கு டெலிபோன் செய்து கேட்டேன். நேற்று எல்லாப் பள்ளிக்கூடங்களும் கந்தோர்களும் விடுமுறைக்குப் பின் திறந்ததால் இப்படி எல்லாப்பகுதியிலும் ஏற்பட்டதென்றும் பஸ்ஸில் கூட்டம் அதிகமென்றும் இதைச் சமாளிக்க ஆவன செய்வதாயும் சொன்னார்.

பள்ளிக்கூடங்கள் திறந்துவிட்டதால், இனி பஸ்ஸுகளில் நெருக்கம் அதிகமாகவே இருக்கும். இதைச் சமாளிக்க அதிக பஸ்ஸுகளைவிடவேண்டும் அல்லது கொக்குவில் முதலிய இடங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு 'ஷட்டில் பஸ் சர்வீஸ்' ஏற்படுத்தவேண்டும். இதைப்பற்றி எவ்வளவோ முறையிட்டும் பயனில்லையென்று சொன்னார் அந்தப் பெண்மணி.

போதிய பஸ்ஸுகள் இல்லையென்றும் பஸ்ஸுகள் வந்ததும் இவ்வித 'ஷட்டில்' சர்வீஸுகளை ஏற்படுத்துவதாயும் இங்குள்ள அதிகாரி தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் போக்குவரத்து நாளுக்குநாள் அதிகரிக்கின்றது. பஸ் சர்வீஸுகளை மக்களுக்கு வசதியான முறையில் அரசாங்கத்தால் நடத்தமுடியாவிட்டால் தனிப்பட்டவர்களின் உதவியையும் நாடி, அவர்களுக்கும் பஸ்விட உரிமையளிக்கலாம். தமிழகத்தில் பல இடங்களிலும் அரசாங்க, தனிப்பட்ட பஸ்ஸுகள் ஓடுவது குறிப்பிடத்தக்கது. எம். பி மார்களே சற்றே இதைக் கொஞ்சம் கவனிப்பீர்களா?

ஃ ஃ ஃ

பஸ்ஸில் குடைபிடித்த கதையையும் அந்த அதிகாரிக்குச் சொன்னேன். யாழ்ப்பாணத்தில் 9 மாதம் வெயிலென்றும், திடீரென மழை பெய்ததும் மேல் பலகையில் இடுக்கு ஏற்பட்டு மழை ஒழுகுவதாயும் பழுதான பஸ்ஸுகளைப் பற்றி கண்டக்டர்கள் உடனுக்குடன் தெரிவிப்பதாயும், பஸ்ஸுகளை ஆறுவாரங்களுக்கு ஒருமுறை பழுது பார்க்க அனுப்புவதாகவும் தெரிவித்தார் அதிகாரி.

இங்கு வரும் இரட்டைத்தட்டு பஸ்ஸுகள் எல்லாம் பழையனவே. லண்டன் வீதிகளில் 10 வருடங்கள் ஓடினவை. ஆகவே அவை சீக்கிரத்தில் பழுதடைவதில் வியப்பில்லை. அதிக பஸ்ஸுகள் இங்கு எப்போது வருமோ தெரியாது. ஆகவே பஸ்ஸுகளுக்காக பலமணி நேரம் காத்திருப்பதைவிட இரண்டொரு மைல்தூரத்துக்குள் இருப்பவர்கள் நடந்து வந்துவிடுவதே பல விதங்களிலும் மேலாகும் என்று தோன்றுகின்றது.

ஃ ஃ ஃ

வேலணையைச் சேர்ந்த ஆத்திசூடி பாடசாலைக்குச் சென்றிருந்தேன். தலைமையாசிரியர் அறையிலே தரையில் பெரிய குழிகளிருந்தன. நாற்காலிகளின் கைகால்கள் ஒடிந்திருந்தன. ஏன் இப்படியென்று கேட்டதற்கு, பாடசாலை அரசாங்கப் பொறுப்புக்குக் கை

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியா: உள்நாட்டிலும், உலக அரங்கிலும்:

# அடுத்த மாதம் முத்தரப்பு மண்டல சார்பற்ற மகாநாடு புதுடில்லியில் நடத்த இந்தியா சம்மதம்

புதுடில்லி, மே 6

**ஐக்கிய அராபியக் குடியரசு ஜனதிபதி நாஸரும், யூகோஸ்லேவிய ஜனதிபதி மார்ஷல் டிட்டோவும், ஸ்ரீமதி இந்திரா காந்தியுடன் முத்தரப்பு பேச்சு நடத்த வேண்டும் என்று தெரிவித்த யோசனைக்கு இந்தியா சம்மதம் தெரிவித்திருக்கிறது.**

புதுடில்லியிலுள்ள ஐக்கிய அராபியக் குடியரசுத் தூதர் நேற்று இந்த யோசனைகளை வெளிநாட்டு ராஜாங்க மந்திரி திரு. தினேஷ்சிங்கிடம் சமர்ப்பித்தபோது, இந்த யோசனையை இந்தியா வரவேற்பதாக திரு. தினேஷ் சிங் அதற்குப்பதிலளித்தார்.

ஸ்ரீமதி காந்தி விரைவில் வெளிநாடுவர இயலாவிட்டால் இரு தலைவர்களும் டில்லிக்கு வந்து முத்தரப்பு பேச்சுக்களில் கலந்துகொள்ளத் தயாராய் இருப்பதாயும் ஐ. அ. குடியரசுத் தூதர் சமர்ப்பித்த யோசனையில் கூறப்பட்டிருந்தது.

இந்த மகாநாடு டில்லியில் நடப்பதை இந்தியா வரவேற்பதாயும், அடுத்தமாத ஆரம்பத்தில் அது நடக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது. சகல மண்டல சார்பற்ற நாடுகளின் உச்சி மகாநாடு ஒன்று நடைபெறுவதற்கு முன், இது பூர்வாங்க மகாநாடாக இருக்கும் என கெய்ரோவில் கூறப்பட்டது.

சர்வதேச பதற்ற நிலையைத்தவிர்ப்பது பற்றியும், உலகில் ஏற்பட்டுவரும் பல சவால்களை மண்டல சார்பற்ற நாடுகள் எவ்விதம் சமாளிப்பது என்பது குறித்தும் ஆலோசனை நடைபெறும் என கெய்ரோ செய்திகள் கூறுகின்றன.

## "காங்கிரசை முறியடிக்க இதர கட்சிகளுடன் ஒத்துழைப்போம்"

### இடதுசாரி கம்யூனிஸ்ட் தலைவர் ராமமூர்த்தி அறிவிப்பு

சென்னை, மே. 6

வருகிற பொதுத்தேர்தலில் காங்கிரசை முறியடிக்கும்பொருட்டு, சுதந்திரா கட்சியைத் தவிர்த்து, இதர எதிர்க்கட்சிகளுடன் தாங்கள் ஒரு ஏற்பாட்டுக்கு வரப்போவதாக இடதுசாரி கம்யூனிஸ்ட் தலைவர் திரு. பி. ராமமூர்த்தி பத்திரிகை மகாநாடு ஒன்றில் அறிவித்தார்.

தடுப்புக் காவலிலிருந்து மூன்று நாட்களுக்கு முன்பு தான் அவர் விடுதலைசெய்யப்பட்டார்.

இந்த முயற்சி தோல்வியுறுமானல் காங்கிரஸ்கட்சியின் வாக்குகளை சிதைக்கும் பொருட்டு, தேர்தல் உடன்பாடு ஒன்றை இக் கட்சிகளுடன் செய்துகொள்ளப் போவதாயும் அவர் கூறினர்.

திராவிடமுன்னேற்றக் கழகம், டாங்கே பிரிவினர், பிரஜா சோஷலிஸ்கட்சி, சம்யுக்தசோஷலிஸ்ட் கட்சி, முன்னணி (பார்வட் பிளாக்) கட்சி ஆகியவற்றுடன் இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்படும் என்றார் ராமமூர்த்தி.

இந்த ஏற்பாட்டின் மூலம் காங்கிரசை பதவியிலிருந்து அகற்றி, மாற்று அரசாங்கத்தை தமிழ்நாட்டில் அமைக்கலாம் என்றார் அவர்.

தி. மு. க. — சுதந்திரா கூட்டு காரணமாக, இடதுசாரி கம்யூனிஸ்டுகளுடன் தி. மு க. கூட்டு சாத்தியமாகுமா என கேட்கப்பட்டதற்கு, கட்சிகளின் சுதந்திரத்தைத் தாம் எதிர்க்கவில்லையென்றும் இதனல் தி. மு. க. வுடன் ஏற்பாடு சாத்தியமல்லாததல்ல என்றும் அவர் கூறினர்.

இடதுசாரி கம்யூனிஸ்டுகளும் வலதுசாரி கம்யூனிஸ்டுகளும் மீண்டும் ஒன்றுசேரமுடியாதென்றும், இரண்டுக்குமிடையே அடிப்படைக்கொள்கை வித்தியாசம் இருக்கிறதென்றும் மற்றோர் கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

நாளை கல்கத்தாவில் இடதுசாரி அதிகாரபீடம் கூடி ஒவ்வொரு ராஜ்யத்தின் நிலையையும் பரிசீலிக்கும் என்றும் ராமமூர்த்தி குறிப்பிட்டார்.

"மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் நாடு சுயதேவைப் பூர்த்தியுறும் என காலஞ்சென்ற நேரு கூறினர். ஆனல் இன்றைய பிரதமரும், உள்நாட்டு மந்திரியும் இன்னும் 10 ஆண்டுகளில் அது சாத்தியமெனக் கூறுகிறார்கள். பெருந்தொகையில் இந்தியா கடன்பட்டு வருகிறது என்றும் அவர் கூறினர்.

உணவுப்பிரச்னை, அவசரகாலத்தை நீக்குதல்போன்ற முக்கிய விஷயங்களில் தமது கட்சி ஜனசங்கம், சுதந்ராகட்சி ஆசியவற்றுடன் ஒத்துழைப்பதில் தவறில்லைஎன்றும் ராமமூர்த்தி கூறினர்.

பி டி ஐ

## குரோமிகோவுடன் பேச்சு

மாஸ்கோ, மே 6

ரஷ்யாவிலுள்ள இந்தியத் தூதர் திரு. டி. என். காரல் ரஷ்ய வெளிநாட்டுமந்திரி திரு. குரோமிகோவைச் சந்தித்து டாஷ்கண்ட் பிரகடனம், வியட்னும், படைக்குறைப்பு, ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜினின் இந்திய விஜயம் ஆகியவை குறித்து நேற்றுப் பேச்சு நடத்தினர்.

## 100 வியட்காங்கியர் பலியாயினர்

சைகோன், மே 6

தென்வியட்னும் மத்திய பகுதியில் அமெரிக்கத் துருப்புக்கள் பெரிய சண்டையில் ஈடுபட்டிருப்பதாயும், 100 கொரிலாக்கள் கொல்லப்பட்டு, 300 பேர் அங்குவளைக்கப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் வியட்காங்கியர் வசமுள்ள அமெரிக்க யுத்தக் கைதிகளை விடுவிப்பது குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத் தலைவருடன் பேச்சு நடத்துமுகமாக, திரு. ஹரிமன் ஜெனிவா வந்திருக்கிறர். பரஸ்பரம் கைதிகள் பரிவர்த்தனைக்கு வியட்காங்கியர் மறுத்துவிட்டார்கள்.

## நேரு உருவப்படம் திறப்பு

புதுடில்லி, மே 6

நேற்று மத்திய பார்லிமெண்ட் மண்டபத்தில் காலஞ்சென்ற பண்டிட் நேருவின் முழு உருவப்படம் ஒன்றை ஜனதிபதி ராதாகிருஷ்ணன் திறந்து வைத்துப் பேசியபோது, திரு. நேருவின் தைரியமான தலைமையைப் பாராட்டினர். இந்தியா பூர்த்தி செய்யவிருக்கும் அடிப்படை அமைப்பை அவர் வழங்கினர் என்றும் ஓரளவு அணுசோதனை ஒப்பந்தத்திற்கு அவர்தான் காரணம் என்றும் டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினர்.

சபாநாயகர் திரு. ஹூக்கும் சிங் பேசியபோது நேரு புரட்சியாளராகவும், சிந்தனையாளராகவும், மாந்தருக்குள் ஒரு இளவரசராகவும் விளங்கியதாகக் குறிப்பிட்டார். உலகத் தலைவர்களிலேயே சமாதான வேட்கையை அவர் தான் அதிகமாக எடுத்துக் கூறினர் என்றும் சபாநாயகர் குறிப்பிட்டார்.

## கானு கி. ஜெர்மன் தகராறு

ஆக்ரா, மே 6

கிழக்கு ஜெர்மனியிலுள்ள கானு வர்த்தக கமிஷன் சிப்பந்திகளையும், 300 மாணவர்களையும் நாட்டைவிட்டுச் செல்ல கிழக்கு ஜெர்மனி மறுப்பது குறித்து, அந்நாட்டுடன் தொடர்புகொள்ளப் போவதாய் கானு அறிவித்திருக்கிறது.

## இந்தோனேஷியா

ஜாகர்த்தா, மே 6

சரவாக், சபாமக்கள் தங்கள் எதிர்காலத்தைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ள மலேஸியா அனுமதித்தால் மட்டுமே, மலேசிய எதிர்ப்புக் கொள்கை நிற்கும் என இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் மாலிக் கூறினர்.

அதே சமயம் மலேஸிய-இந்தோனேஷிய தகராறைத் தீர்க்கத் தாம் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் பேசத்தயார் என மலேஸிய துணைப்பிரதமர் துன் அப்துல் ரஸாக் தெரிவித்திருக்கிறர்.

## யுதாண்ட்

நியூயோர்க், மே 6

ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் 10 நாள் ஐரோப்பிய விஜயத்திற்குப் பின் நியூயோர்க் திரும்பினர்.

## நீவின் பாக். விஜயம்

ராவல்பிண்டி, மே 6

பர்மியத் தலைவர் நீவின் நாளை 4 நாள் பாகிஸ்தான் விஜயத்தை மேற்கொண்டு, ராவல்பிண்டி வருகிறர்.

## ஆசிய யுவர் உதைபந்தாட்டம்

மணிலா, மே 6

இங்கு நடைபெற்ற ஆசிய இளைஞர் உதைபந்தாட்டப் போட்டியில் தாய்லந்து 5–0 கோல்களால் இலங்கையைத் தோற்கடித்தது.

மற்றோர் போட்டியில் சிங்கப்பூர் ஜப்பானை 4—1 கோல்களால் தோற்கடித்தது.

## விம்பிள்டன் போட்டியிலும் கிருஷ்ணன் இல்லை

கல்கத்தா, மே. 5

இம்முறை விம்பிள்டன் போட்டியிலும், இரு ஐரோப்பிய டென்னிஸ் போட்டிகளிலும் கிருஷ்ணன் கலந்துகொள்ளமாட்டார்.

ஜூன் 3 ம் வாரத்தில் நரேஷ் குமாருடன் அவர் விம்பிள்டனில் கலந்துகொள்ளவிருந்தார், ஆனல் தமது இயலாமை குறித்து சென்னையிலிருந்து அவர் தமது சகாவுக்கு தந்தி அனுப்பியிருக்கிறர்.

கிருஷ்ணனின் காயமடைந்துள்ள மணிக்கட்டே இதற்குக் காரணமென்றும், கஷ்டமான விம்பிள்டன் போட்டி இதற்கு இடையூறாக இருக்குமென்றும் டென்னிஸ் வட்டாரங்கள் கூறின.

1954-ம் ஆண்டுமுதல் ஒரு தடவை மட்டுமே, (1964-ம் ஆண்டு) அவர் விம்பிள்டனில் கலந்துகொள்ளவில்லை இது இரண்டாவதுதடவை.

1949-ம் ஆண்டு முதல் நரேஷ்குமார் எல்லா விம்பிள்டன் போட்டிகளிலும் கலந்துகொண்டார். கிருஷ்ணன் இல்லாததல் சிங் மிஸ்ராவுடன் ஜோடிசேர்ந்து அவர் விளையாடவிருக்கிறர். இருவரும் ஜூன்முதல்வாரம் புறப்படுவார்கள்.

கிருஷ்ணன் இல்லாதது குறித்து தாம் துக்கமடைவதாக நரேஷ்குமார் தெரிவித்தார்.

தமக்கு இன்னும் மணிக்கட்டில் வலி இருப்பதாய் திரு. கிருஷ்ணன் கூறியிருக்கிறர்.

பி டி ஐ

பாகிஸ்தானுக்கு ஆயுதசப்ளை

## இந்தியாவுக்கு முன்கூட்டியே அமெரிக்கா அறிவிக்குமாம்

வாஷிங்டன், மே 6

பாகிஸ்தானுக்கு ராணுவ உதவி அல்லது ஆயுத விற்பனை சம்பந்தமாக தற்போதைய அமெரிக்க கொள்கையில் மாற்றம் ஏற்படுமானல், அதற்கு முன் இந்தியாவுக்கு முன்கூட்டியே அறிவிப்பதாக அமெரிக்கா வாக்களித்திருக்கிறது.

பாகிஸ்தானுக்கு ராணுவ உதவியை புதுப்பிப்பது குறித்தும், பாகிஸ்தானுக்கு உதவி குறித்தும் பெஷாவரிலுள்ள அமெரிக்க தளங்களை பாகிஸ்தான் மூடியது குறித்தும் நிர்வாகத்துக்குள்ளேயே கொள்கை முரண்பாடு காணப்பட்டதாக சென்றவாரம் அமெரிக்கப் பத்திரிகைகள் பிரசுரித்திருந்தன. பலர் நிர்ப்பந்தம்காரணமாக ஆயுதவிற்பனை தொடரலாம் என அறிவிப்புக்கள் வெளியாயின.

இதைத் தொடர்ந்து இந்தியா அமெரிக்காவிடம் விளக்கம் கோரியிருந்தது. தற்போதைய நிலைமையில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும், அப்படி மாறுதல் இருந்தால் முன்கூட்டியே தெரிவிப்பதாயும் அமெரிக்கா அதற்கு உறுதி கூறியிருக்கிறது. (பி. டி. ஐ)

## நாடு திரும்பும் இந்தியர்களுக்கு ராஜ்யங்களின் உதவி

### மத்திய மந்திரி கோரிக்கை

புதுடில்லி, மே 6

இலங்கை, கிழக்கு பாகிஸ்தான், பர்மா, மொஸாம்பிக் ஆகிய நாடுகளிலிருந்து வெளியேறி வரும் இந்தியர்களுக்கு, புனர்நிர்மாண வாழ்வளிக்க உதவும்படி இந்திய ராஜ்யங்களை வேலையளிப்பு, புனருத்தாரண மந்திரி திரு ஜகஜீவன்ராம் விண்ணப்பித்தார்.

ராஜ்ய புனருத்தாரண மந்திரிகள் மகாநாட்டுக்கு திரு. ஜகஜிவன்ராம் தலைமை வகித்தார்.

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வெளியேறி வருபவர்களைத் தவிர, இலங்கை, பர்மா, மேற்கு ஆபிரிக்கா ஆகிய நாடுகளில் தலைமுறை தலைமுறையாக வசித்து வந்த இந்தியர்கள் நாடு திரும்புவதயும் அவர்களை சமாளிக்கவேண்டியிருக்கிறது எனவும் அவர் கூறினர்.

"வெளிநாட்டு அரசாங்கங்கள் பின்பற்றும் கொள்கை காரணமாக திடீரென இவர்கள் உதவியற்ற நிலைக்கு ஆளாகிவிட்டனர்.

இதுவரை பர்மாவிலிருந்து ஒரு லட்சம் பேருக்கு மேல் வந்துவிட்டார்கள், இதேபோல் மொஸாம்பிக்கிலிருந்தும் அவர்கள் திரும்பியிருக்கிறர்கள். இவ்வாண்டுக் கடைசியில் பர்மாவிலிருந்து இன்னும் பலர் எதிர்பார்க்கப்படுகிறர்கள்" என்றும் அவர் கூறினர்.

இலங்கையிலிருந்து முதல் ஆண்டில் 1 லட்சம் பேர் வருவார்கள் என்றும், எல்லாமாக மொத்தம் 5 லட்சம் பேர் திரும்ப இருக்கிறர்கள் என்றும் திரு. ராம் தெரிவித்தார்.

கிழக்கு பாகிஸ்தானில் 80 லட்சம் ஹிந்துக்கள் வசிக்கிறர்கள் என்றும், இவர்கள் அங்கு 23 சதவிகிதத்தினர் என்றும் மந்திரி கூறினர். (பி. டி. ஐ)

## பிரிட்டிஷ் தலைவருக்கு கதவடைப்பு

லண்டன், மே 6

பிரிட்டிஷ் லிபரல் கட்சித் தலைவர் திரு. கிரிமண்ட் சீனவுக்கு 4 வாரம் விஜயத்தை மேற்கொள்ளவிருந்தார். ஆனல் அவருக்கு விஸா வழங்க பீகிங் மறுத்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த நாடே சொந்த நாடு என்கிறார் நடிகர் எஸ். எஸ். ஆர்.

பருத்தித்துறை, வெள்ளி

''தமிழ் பேசும் மக்கள் எந்த நாட்டில் பிறந்து வாழ்ந்தாலும் அந்த நாட்டையே சொந்த நாடாகக் கொண்டு அந்நாட்டுக்கே விசுவாசமுடையவர்களாக இருக்க வேண்டும், அறிஞர் அண்ணாவின் கருத்தும் இது தான். எனக்கு அரசியலில் கிடைத்துள்ள வெற்றி தனிப்பட்டமுறையில் கிடைத்ததல்ல. தி. மு. கழகத்தின் வெற்றியேயாகும்''

இவ்வாறு இலட்சிய நடிகர் திரு எஸ். எஸ். இராஜேந்திரன் பருத்தித்துறை மெதடிஸ்ட் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற நாட்டிய விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

பருத்தித்துறை நகரசபையின் தலைவர் திரு. ந. நடராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நடிகர் எஸ். எஸ் ஆரையும் நடிகை விஜயகுமாரியையும் தலைவர் திரு. நடராசா வரவேற்று பேசுகையில் திரு. இராஜேந்திரனுக்கு பல ஆயிரக்கணக்கான ரசிகர்கள் இப்பகுதியில் இருப்பதைத் தெரிவித்து அவர் கலைஞராகமட்டுமின்றி அரசியல் அறிஞராகவும் திகழுகிறாரென்றும் அவர் தலைசிறந்த லட்சிய வாதியாகையாலேயே இலட்சிய நடிகர் என்ற பெருமைக்குரித்தானார் என்றும் கூறினார்.

கலைஞர் தாண்டவச் செல்வன் ஆனந்த இராசமாணிக்கத்தின் நடன நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

REGAL--JAFFNA
NOW SHOWING!
Sidney James
Liz Fraser
in
DOUBLE BUNK

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சிவாஜி - தேவிகா
நடித்த
மூடன் முத்து

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45க்கு
மனோகர் - மனோரமா
நடித்த
கொஞ்சும் குமரி

## பதவிமோகம்பற்றி உதவி மந்திரி

கண்டி, வெள்ளி

'மக்களுக்குச் சேவைசெய்யும் நோக்கமில்லாது தங்கள் சொந்த நலனுக்காக பதவிவகிக்கும் அரசியல் வாதிகள் சமுகத்தில் நின்றும் விரட்டப்பட வேண்டும்' என நிதிஅமைச்சின் உதவி பாராளுமன்றக் காரியதரிசி திரு. என். விமலசேனா அகிலஇலங்கை ஸ்தல ஸ்தாபன ஊழியர் சங்கஆறுவது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது: தற்பொழுதுமாறிவரும்சூழ்நிலையை அரசியல்வாதிகள் மட்டுமல்லாது அரசாங்க உத்தியோகத்தர்களும் நன்றாகக் கவனிக்க வேண்டும். தொழிற்சங்கங்கள்தொழிற்சங்கத்துடன் சம்பந்தப்பட்ட விஷயங்களுடன் தங்கள் கடமைகளைச் செய்தால் அரசாங்க ஊழியர்களும் தங்கள் கடமைகளைத் திறமையாகச் செய்ய முடியும் என்றார்.

## பொலிசாரை தாக்கியதாக வழக்கு

மாவிட்டபுரம், வியா.

கீரிமலையைச்சேர்ந்த சின்னத்தம்பி நாகமணி என்பவர், கீரிமலையைச் சேர்ந்த விசாலாட்சி என்பவரின்வீட்டில்சட்டவிரோதமாகசாராயம் இருக்கிறதா என்று பரிசோதிக்கச்சென்ற காங்கேசன்துறை பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. ஏ.எச். எம். ஜவ்வாரை அலவாங்கால் அடிக்க முயன்றதாகவும், அவர் அரசாங்க உத்தியோகத்தர் என்ற முறையில் அவரைக்கடமைசெய்ய விடாமல் தடுத்ததாகவும், கெட்டவார்த்தைகளால்ஏசியதாகவும் எல்லாமாக மூன்று குற்றங்கள் சாட்டி காங்கேசன்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துருபான முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பொலிஸ் தரப்பில் ஆஜரான காங்கேசன்துறை பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி நீதிபதியிடம் இவ்வழக்கில் எதிரி தரப்பினர் வழக்காளியின் முறைப்பாட்டு பிரதிகேட்டு விண்ணப்பித்தற்கு பொலிசார் கொடுக்காமையால் அதுபற்றி எதிரி தரப்பினர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு விண்ணப்பித்ததுபற்றி விசாரணை நடத்திய அர்ட்டோணி ஜெனரலின் பதில் கிடைக்கவில்லையென்றும் இதனால் எதிரி தரப்பினருக்கு முறைப்பாட்டுப்பிரதி கொடுப்பதா இல்லையா என்று தீர்மானிக்க முடியவில்லையென்றும் வழக்கை வேறோர் திகதிக்கு ஒத்திவைத்தால் அதற்கிடையில் அட்டோணி ஜெனரலின் பதிலை அறிந்துவேண்டிய நடவடிக்கையெடுக்கலாமென்றும் கூறினார்.

இதனை ஏற்ற நீதிபதி வழக்கை இம்மாதம் 24-ந் திகதிக்கு விசாரணைக்காக ஒத்திவைத்தார். எதிரி தரப்பில் திரு ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். பொலிஸ் தரப்பில் இன்ஸ்பெக்டர் திரு, எஸ். வி மூர்த்தி ஆஜரானார்.

## சங்கானையில் வெசாக் விழா

சுழிபுரம், வெள்ளி

இந்த நாட்டில் வாழும் இரண்டு பெரிய சமூகத்தினரும் தேசிய ஒருமைப்பாட்டுடன் சகல விஷயங்களிலும் கலந்துகொள்வதன் மூலம் சிறந்த நட்புறவையும் ஒற்றுமையையும் உருவாக்கலாம். தொன்றுதொட்டு இந்த நாட்டில் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்த மக்கள் கடந்த சில காலங்களாக பதவி ஆசை பிடித்த அரசியல் வாதிகளால் தப்பான பாதையில் இட்டுச்செல்லப்பட்டுவிட்டனர், இதனால் நாட்டில் ஐக்கியம்குலைந்துநாட்டுநிலைமை சின்னாபின்னமடையவேண்டி ஏற்பட்டுள்ளது. இடையில் ஏற்பட்ட சின்னாபின்ன நிலைமையையும் ஐக்கியத்தையும் மீண்டும் ஏற்படுத்துவதற்கு கடந்த சில காலங்களாக இரண்டு சமூகத்து சமயத் தலைவர்கள், பொது மக்கள், அரசியல் வாதிகள் ஆகியோர் கடைப்பிடிக்கும் செயலை மேலும் பலப்படுத்த வேண்டும். அதற்கு மேலும் இப்படியான பொது விழாக்கள் தான் ஏற்றவையாகும்'' என சங்கானை பொலிஸ் நிலைய முன்றலில் நடைபெற்ற வெசாக் தினவிழாவில் ஆரம்பவுரை நிகழ்த்திய சங்கானை பட்டினசபைத் தலைவர் சி. க. திருச்சிற்றம்பலம் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேளக்கச்சேரிகள், மெல்லிசைக் கச்சேரிகள் ஆகியன விழாவில் இடம்பெற்றன. [illegible] இசைக்கப்பட்டன.

## "கல்வித்துறையில் மாற்றங்கள் அவசியம்" — உடுப்பிட்டி எம். பி.

பருத்தித்துறை, வெள்ளி

''நாட்டின் முன்னேற்றத்துக்கு கல்விச் சுதந்திரம் இன்றியமையாத ஒன்றாகும். அரசியல் தலையீடுகள் கல்வியின் தரத்தையும் அதன் மதிப்பையும் குறைக்கும் சக்திகொண்டவை. கல்வித்துறையில் மாற்றங்கள் அவசியம். அதற்கான ஆலோசனைகள் அறிஞர்கள் பழைய மாணவர் சங்கங்கள் போன்றவையிலிருந்து பெற்றுக் கொள்ளப்படவேண்டும்.''

உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி பழைய மாணவர்சங்கவிழாவில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

பிரதம விருந்தினர்களில் ஒருவரான திரு. ஹன்டி பேரின்பநாயகம் பேசுகையில் கல்விச் சுதந்திரத்தை மேலும் வற்புறுத்தியதுடன் ஹாட்லிக் கல்லூரியின் சேவையையும் பாராட்டினார்.

நீதிபதி திரு. யே. ரி. இராசரத்தினமும் உரையாற்றினார். விழாவையொட்டிப் பழைய மாணவர்களுக்கிடையே கிரிக்கெட் உதைதாட்டப்போட்டிகள் நடைபெற்றன.

பழைய மாணவர் சங்கப் புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எஸ். கே. திரவியநாயகம், காரியதரிசிகள்: திருவாளர்கள் எஸ். செல்லத்துரை, ஆர். கணபதிப்பிள்ளை, தனாதிகாரி: வி. இராசநாயகம்.

# இலங்கையில் அந்நிய முதலீட்டுக்கு நல்லசூழ்நிலை

## லண்டனில் மந்திரி பிலிப் குணவர்த்தன அறிவிப்பு

லண்டன், மே 6

''இலங்கையில் முதலீடு செய்வதற்கு நல்ல சூழ்நிலையும் சந்தர்ப்பமும் உருவாகியுள்ளது என்றும் கடந்தஒரு வருடத்திற்குள் நாடு வளர்ச்சி அடைவதற்கான நல்ல அறிகுறிகள் தோன்றியுள்ளதென்றும் கைத்தொழில், மீன்பிடி மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன லண்டனில் கூறினார்.

''எங்கள் ப்ரதான ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, ரப்பர், தெங்குப் பொருட்கள் நல்ல சந்தர்ப்பத்தை எங்களுக்கு தேடித் தந்துள்ளது. ஆனால் ஏற்றுமதிப் பொருள்களின் விலைகள் குறைவாகயிருப்பதால் எங்களுக்குத் தேவையான இயந்திர உபகரணங்களை நாங்கள் வாங்க இயலாதிருக்கின்றது'' என்றும் அவர் கூறினார்.

பிரிட்டன் கொடுத்துள்ள கடனுதவி தற்பொழுது எங்களிடமுள்ள தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மூலப் பொருட்களை வாங்குவதற்கு வழிவகுத்துள்ளது. மரத் தொழிற்சாலை, எண்ணை சுத்திகரிப்பு தொழிற்சாலை, ரசாயன தொழிற்சாலை போன்ற வகைகளே தற்பொழுது எங்களுக்கு அத்தியாவசியம் இவற்றையெல்லாம் நிறுவுவதற்கு மூலப் பொருட்களும் இயந்திர சாதனங்களும் வேண்டும் என்றும் அவர் கூறினார்.

எங்களது பிரதான ஏற்றுமதிப் பொருளான தேயிலையை நாங்கள் இறக்குமதி செய்த தேயிலைப் பெட்டிகளிலேயே வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றோம். அவற்றையெல்லாம் இங்கேயே உற்பத்தி செய்தால் அதிகமான பணத்தைச் சேமிக்க முடியும்

விவசாயத்தை விருத்தி

(5-ம் பக்கம் பார்க்க)

கிங்ஸ்லி
(கொழும்பு)
பிளாஸா
(வெள்ளவத்தை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா
(மட்டக்களப்பு)
ஸ்ரீகிருஷ்ணா
(திருகோணமலை)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனோரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி

## வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதந் திருப்பணிக்கு?
இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

தனாதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுவதி சிரிக்க மறுத்தாள்: இளைஞன் உயிர் நீத்தான்!

## காங்கேசன்துறையில் சம்பவம்

மாவிட்டபுரம், வெள்ளி

எதிர் எதிரேயுள்ள வீடுகளில் வேலைசெய்யும் இளைஞனும் யுவதியும் ஒருவரைப் பார்த்து ஒருவர் சிரித்துக்கொண்டிருந்ததினால் இளைஞனின் உள்ளத்தில் காதலை ஏற்படுத்தியதாகவும் ஒரு நாள் இளைஞன் சிரித்தும் யுவதி சிரிக்காததினால் காதலனான இளைஞன் மனமுடைந்து கிருமிநாசினி அருந்தித் தற்கொலைசெய்து கொண்டதாகவும் இங்கு நடைபெற்ற மரண விசாரணையொன்றின்போது தெரியவந்தது.

காங்கேசன்துறை விமான நிலையத்தில் உதவி அதிகாரியாகக் கடமையாற்றும் திரு. கனகசபை வீட்டில் வேலை செய்துவந்த இகலகெதர ஜினசேன என்னும் பதினெட்டு வயது இளைஞனின் மரணம் சம்பந்தமாக மரண விசாரணை நடத்தப்பட்டபோதே மேற்கண்ட விபரம் தெரியவந்தது. காங்கேசன்துறை திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. அ. குமரகுரு இம்மரணம் சம்பந்தமாக மூன்று தினங்கள் விசாரணை நடத்தினார் காங்கேசன்துறைப் பொலிஸ்கான்ஸ்டபிளான ஜி. எல் எவ். கருணாரத்தின சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

எனக்குக்கிடைத்த தகவலின்பேரில் காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்குச் சென்றேன் அங்கு காலஞ்சென்ற ஜினசேன ஆஸ்பத்திரி பரிசோதனைக் கட்டிலிற் படுத்திருந்தார் அப்போது அவருக்கு பிராணவாயு செலுத்தப்பட்டுக்கொண்டிருந்தது அவர் வாக்குமூலம் அளிக்கக்கூடிய நிலையில் அப்போது இருக்கவில்லை நான் அங்கிருந்து பலாலி விமான நிலையத்துக்குச்சென்று அங்குள்ள சாட்சிகளைப்பதிவுசெய்தேன், காலஞ் சென்றவர் வேலை செய்த வீட்டில் இரண்டு 'பொலிடோல்' போத்தல்களைக்கண்டு எடுத்தேன். நான் திரும்ப ஆஸ்பத்திரிக்கு வந்தபோது ஜினசேன வாக்குமூலமளிக்கக்கூடிய நிலையில் இருந்தார். நான் அவரிடம் 'வாக்குமூலமளிக்கிறீரா?' எனக்கேட்டபோது அவர் 'ஆம்' என்றார். அவர் என்னிடம், 'எனது எசமான் கனகசபை என்னைவீட்டில் விட்டுவிட்டு கொழும்புக்குப்போய்விட்டார் எங்கள் வீட்டுக்கருகே உள்ள விமானப் போக்கு வரத்து அதிகாரியின் வீட்டில் ரீட்டா என்னும் பெயருள்ள வேலைக்காரப் பெண் இருக்கிறாள். நான் அவளுடன் நட்போடு இருந்தேன். நான் அவளைப் பார்த்துச் சிரித்தால் அவளும் என்னைப்பார்த்துப் பதிலுக்குச் சிரிப்பது வழக்கம். இன்றுமாலை ஐந்து மணியளவில் ரீட்டா தனது வீட்டுக்குப் பின்னால் ஏதோ கழுவிக்கொண்டிருப்பதைக் கண்டேன். நான் அச்சமயம் அவளைப் பார்த்துச் சிரித்தேன். ஆனால் வழமைக்கு முற்றிலும் மாறாக என்னைப் பார்த்துச் சிரிக்காமல் முகத்தைத் திருப்பிக்கொண்டு போய்விட்டாள் இதனால் நான் மனம் வெறுத்து வீட்டில் இருந்த பொலிடோலை நீரிற் கலந்து குடித்தேன். நான் வாய் நிறையக் குடித்ததும் என்னால் நிற்கமுடியாது போய்விட்டது. வலியும் அதிகரித்தது. நான் சத்தமிட்டேன். பலர் வந்தனர். நான் அவர்களிடம் பொலிடோல் குடித்துவிட்டதாகச் சொன்னேன். அவர்கள் என்னை 'அம்புலன்ஸ்' வண்டியில் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தார்கள். நான் உபயோகித்த 'பொலிடோல்' வீட்டிலுள்ள பூச்செடிகளுக்கு உபயோகிக்க எசமான் வாங்கி வைத்திருந்தவையாகும்' என்று காலஞ்சென்றவரின் வாக்கு மூலத்தைக் கான்ஸடபிள் மரண விசாரணை அதிகாரி முன்னிலையில் சமர்ப்பித்துக் கூறினார்.

அவர் மேலும் சாட்சியமளிக்கையில் தாம் பொலிஸ் நிலையம் திரும்பியபின் ஜினசேன இறந்துவிட்டதாகத் தகவல் கிடைத்ததுஎன்றார்.

வர்ணகுலசூரியா ரீட்டா பெர்னாண்டோ (17 வயது) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

''நான் விமான நிலைய போக்குவரத்து அதிகாரி திரு. சேரம் வீட்டில் வேலை செய்கிறேன். எனக்குக் காலஞ்சென்ற ஜினசேனவைத் தெரியும். அவர் பக்கத்து வீட்டில் வேலைசெய்பவர். நான் எமது வீட்டின் முன்பக்கம் வருகையில் ஜினசேன என்னைப் பார்த்துச் சிரிப்பார்;பதிலுக்கு நானும் சிரிப்பேன். சம்பவதினம் காலை என்னுடைய எசமான் 'மரியாதையாக வீட்டில் இருக்கவேண்டுமெனவும் அயலிலுள்ள ஆண்களைப் பார்த்து சிரிக்கக்கூடாது எனவும் எச்சரித்தார். சம்பவதினம் வழமைபோல ஜினசேனஎன்னைப்பார்த்துச் சிரித்தார்; நான் பதிலுக்கு அவரைப் பார்த்துச் சிரிக்கவில்லை.

கியலகெதர அரதியா சாட்சியமளிக்கையில் கூறியதாவது: நான் காலஞ்சென்றவருடைய தந்தை காலஞ்சென்றவர் 1956-ம் ஆண்டு வீட்டைவிட்டு வெளியேறியவர். அதற்குப்பின் இடைக்கிடையே வீட்டுக்கு வருவார். கடைசியாக கடந்த மாதம் 9-ம் திகதி வந்தார். 16-ம் திகதி திரும்பினார். 25-ம் திகதி சுகமாக இருப்பதாகக் கடிதம் எழுதினார். 3-ம் திகதி மகன் இறந்துவிட்டதாகத் தந்தி கிடைத்தது. நான் நேற்றிரவு இங்கு வந்தேன். நான் இவரின் மரணம் சம்பந்தமாக சந்தேகப்படுகிறேன். காலஞ்சென்றவர் தற்கொலை செய்துகொள்ள எவ்வித காரணமுமில்லை. கூச்சசுபாபவம் உள்ளவர். இவர் காதலிப்பார் என நான் நினைக்கவில்லை தற்கொலை செய்துகொள்ளக்கூட தைரியம் இல்லாதவர். அவரது கழுத்தில் வீக்கமும் கைகளிற் காயங்களும் காணப்படுகின்றன.

காங்கேசன்துறை ஆஸ்பத்திரி டாக்டர் ராஜேந்திரம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

நான் காலஞ்சென்றவரின் உடலை இன்று பரிசோதனை செய்தேன். அவரது முழங்கைகளி[illegible] கா[illegible] உராஞ்சுக் காயங்களைத் தவிர வேறு புறக்காயங்கள் ஏதுமில்லை அவரின் வயிற்றில் அரை வயிறு உணவு இருந்தது. அதில் கிருமிநாசினியும் கலந்திருந்தது. கிருமிநாசினி அருந்தியதனால் இம்மரணம் நிகழ்ந்துள்ளதாக அபிப்பிராயப்படுகிறேன்.

மற்றும் பலர் சாட்சியமளித்தனர். மரணவிசாரணை அதிகாரி திரு. அ. குமர[illegible] தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## இலங்கையில்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய நாங்கள் பல வழிகளைக் கையாண்டுள்ளோம. 1957-ம் ஆண்டு நாம் 30,000,000 முட்டைகளை இறக்குமதி செய்திருந்தோம் ஆனால் தற்பொழுது முட்டைகள் இறக்குமதி செய்யப்படுவதில்லை.

இலங்கையில் பல உள்ளூர் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு சந்தர்ப்பம் உண்டு இவற்றையெல்லாம்செய்வதற்கு உபகரணங்களும் இயக்குனருந் தான் தேவையாயிருக்கின்றது என்றும் மந்திரி பிலிப் கூறினார்.

திரு. குணவர்த்தன லண்டனுக்கு விஜயம் செய்திருந்த சமயம் அங்குள்ள பல தொழிற்சாலைகளையும் இலங்கை தேயிலை விநியோக நிலையத்தையும் பார்வையிட்டார்.

கிங்ஸ்டன்

# விளையாட்டுப்போட்டிகளில் இலங்கை கலந்துகொள்ளும்

## 17 வீரர்கள் பங்குபற்றுவர்

கிங்ஸ்டன், மே. 6

ஆகஸ்ட் மாதம் நான்காம் திகதி ஜமேக்கா தலைநகர் கிங்ஸ்டனில் ஆரம்பமாகவிருக்கும் பிரிட்டிஷ் எம்பெயர் காமன்வெல்த்விளையாட்டுப்போட்டிகளில் இலங்கையும் கலந்துகொள்ள விருக்கிறது. இலங்கை ஒலிம்பிக் காமன்வெல்த் விளையாட்டுச் சங்கத்தின் தீர்மானத்தைத் தொடர்ந்து 17 விளையாட்டு வீரர்களைக் கொண்ட இலங்கை கோஷ்டி இங்கு வரவிருக்கிறது.

இக்கோஷ்டியில் 15 வீரர்களும் 2 வீராங்கனைகளும் இருப்பார்களெனத் தெரியவருகிறது

சைக்கிளோட்டப்போட்டிகளில் கலந்துகொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபொழுதிலும் கடைசி நேரத்தில் இந்த யோசனை கைவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பாட்மின்டன், குத்துச் சண்டை, நீச்சல், மல்யுத்தம், ஓட்டப் போட்டிகள், பாரந்தூக்குதல் ஆகிய போட்டிகளில் இலங்கை வீரர்கள் கலந்துகொள்வார்களென நம்பப்படுகிறது.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி

வட்டுசிவன் இந்து சமய அபிவிருத்திச்சங்க 9-வது வருடாந்தக்கூட்டம் சென்ற புதன்கிழமை சிவன்கோவிலுக்கு அருகாமையிலுள்ள மைதானத்தில் சங்கத் தலைவர் பண்டிதர் திரு. க. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்றது.

நடப்புவருட நிர்வாகிகளாகப்பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டனர்: காப்பாளர்: வைத்தியகலாநிதி அ. க. குமாரசுவாமி, தலைவர்: திரு. வை. இராசையா, உபதலைவர் திரு. ச. இராசரத்தினம், திரு, பொ. பஞ்சாட்சரம். பொதுக்காரியதரிசி: திரு கா துரைராசசிங்கம், நிர்வாகக் காரியதரிசி: செல்வன் மு வேதாந்தசிவம், தனதிகாரி: திரு நா இராசரத்தினம், நிர்வாகசபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள்; சி வல்லிபுரம், க கருணநிதி, மூ சு வீரசிங்கம், நா புவனசுந்தரம், வீ பரமநாதன், வே நச்சினார்க்கினியசிவம்.

## எம்.பி. நடவடிக்கை பலனளித்தது

கொழும்பு, வெள்ளி

கங்கசிறிபுர சிங்கள-தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை பற்றி நியமன எம். பி. திரு. ஸி. அண்ணாமலை உதவிக் கல்வி அதிகாரிக்கு எடுத்துக்கூறியதைத் தொடர்ந்து மே மாதம் தொடக்கம் மேலதிகமாக ஐந்து ஆசிரியர்கள் இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள். முன்னர் இந்தப் பாடசாலையில் ஆறு ஆசிரியர்கள் கடமையாற்றிவந்தனர்.

## மகளிர் மன்ற நிர்வாகிகள்

உடுப்பிட்டி, வெள்ளி

வடமராட்சி மகளிர் மன்றத்தின் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர்: திருமதி எம். திருச்செல்வம், உபபோஷகர்: திருமதி ஏ சி. விஸ்வநாதன், தலைவி: திருமதி சத்தியபாமா ஸ்ரீ பத்மநாதன், உபதலைவிகள்: திருமதி விஜயலட்சுமி குலத்துங்கம், திருமதி சந்திரநாயகி நவரத்தினம், காரியதரிசி: திருமதி சா. மாணிக்கவாசகர், உபகாரியதரிசி: திருமதி எஸ். ரவீந்திரன், தனதிகாரி: திருமதி ஜெ. சந்திரசேகரம், உபதனதிகாரி: திருமதி ரதிஜோதிரதி, நிர்வாகசபைக் குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## பஸ் சேவையை நீடிக்க கோரிக்கை

சுழிபுரம், வெள்ளி

சங்கானைவரையும் சேவை செய்யும் இரட்டைத் தட்டு பஸ்சேவையை சுழிபுரம் வரையும் சேவைசெய்யவிட வேண்டுமென சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசாமி இ. போ. ச. யாழ் முகாமையாளரைக் கேட்டுள்ளார்.

## பாட்டரி தட்டுப்பாடில்லை

சுழிபுரம், வெள்ளி

இப்பகுதியிலுள்ள மக்கள் தமக்கு வேண்டியறேடியோ பாட்டரிகளை வெகுசுலபமாகசில வியாபார ஸ்தலங்களில் இருந்து பெற்றுக்கொள்கின்றனர். கடந்த சில தினங்களாக வானொலி உத்தரவுப்பத்திரத்துடன் பாட்டரி கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்யப்பட்டுவருகின்றது.

## அசோக் மேத்தா புறப்பாடு

வாஷிங்டன், மே 6

இந்திய திட்டமந்திரி திரு. அசோக்மேத்தாநேற்று ஜனதிபதி ஜோன்ஸனையும், வெளிநாட்டுமந்திரி ரஸ்கையும் தனித்தனியாக இரண்டாம் முறையாகவும் சந்தித்துப்பேசினார்.

தமது பேச்சுக்கள் பற்றி அவர் பின்பு நிருபர்களிடம் பேசியபோது, பாரதத்தின் பிரச்னைகள் நன்கு புரிந்துகொள்ளப்பட்டிருப்பதாயும் நிர்ப்பந்தம் எதுவும் இருக்கவில்லை என்றும் திரு. மேத்தா கூறினார்.

திரு. மேத்தா இன்று வாஷிங்டனிலிருந்து தாயகம் றப்பட்டார்.

## லண்டனுக்கு ரொடீஷியக் கோஷ்டி

லண்டன், மே. 6

பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தும் மூவர் அடங்கிய ரொடீஷிய தூது கோஷ்டி நாளை லண்டன் புறப்படும். கொனிலஸ்க்ரீன் பீல்ட் தூதுகோஷ்டிக்குத் தலைவர்.

பிரதமர் வில்சனின் அந்தரங்க காரியதரிசி திரு. ஒலிவர் ரைட்டும், மற்றோர் அதிகாரியும் ரொடீஷிய தூதுகோஷ்டியுடன் இரு நாடுகளுக்குமிடையே பேச்சுக்கான ஒரு அடிப்படையைக் கண்டுபிடிப்பதுபற்றி ஆராயும்.

## வரிவிளம்பரம்

### தேவை

வடமராட்சி மகளிர் மன்றம் மாணவிகளுக்கு, நடனம் பயிற்றுவிப்பதற்கு நடன ஆசிரியை தேவை. கலாக்ஷேத்திரப்பயிற்சிபெற்றவர்கள் 15-5-66-க்கு முன் விண்ணப்பிக்கவும். சாவித்திரி தேவி மாணிக்கவாசகர், செயலாளர், வடமராட்சி மகளிர் மன்றம், பிரதான வீதி, பருத்தித்துறை. 299

தினசரி 75கலன் சுத்தமான பனங்கள்ளு கொடுப்பதற்கு ரெண்டர் கோரப்படுகின்றது. பெர்மிட் எடுத்துக் கொடுக்கப்படும். 14-5-66க்குள் விண்ணப்பிக்கவும். குடாநாட்டு கைத்தொழில் கம்பனி லிமிட்டெட், மந்திகை, பருத்தித்துறை. 30

ஒரு குமாஸ்தாவும், ஒரு காசாளரும் தேவை. பிணைப் பணம் முறையே ரூபா 1000/-, 1500/- கட்டக் கூடியவர்கள் விண்ணப்பிக்கவும். குடாநாட்டு கைத் தொழில் கம்பனி லிமிட்டெட், மந்திகை, பருத்தித் துறை. 306

கொழும்பிலுள்ள பல சரக்கு வியாபாரத்துக்குப் பணமுதலிடு செய்யக்கூடிய பங்காளி அல்லது மனேச்சர் தேவை. மாதாந்தம் ஆயிரம் ரூபாவுக்கு மேல் ஆதாயம் கிடைக்கக்கூடியது. மனுச்செய்க: செல்லத்துரை, 271, நாவலர்வீதி, (ஆனைப்பந்தி) யாழ்ப்பாணம். 308

### விற்பனைக்கு

வவனியா நகரசபை எல்லைக்குள் வேப்பங்குளத்தில் (பிரதான வீதி) 5 ஏக்கர் நிலம் விற்பனைக்குண்டு. 30 அடி அகலமுள்ள கிணறு அடங்கிய இக்காணியில், 75 தென்னை மரங்களும், 30 மா மரங்களும் வேறு பிரயோசனங்களும் உண்டு. வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்த இடம். எஸ். சந்திரசேகரம், தபாற் கந்தோர், வவனியா. 291

வண்ணார்பண்ணை கன்னாதிட்டி வீதி 34ம் இலக்க புதிய வீடும் வளவும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு இல: 303, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 303

வேலணை மேற்கு நாலாவரையில் இருக்கும் 35 பரப்பில் பனைகளும், வேப்பமரங்களும்அத்துடன் 12 1/2 பரப்பு நெல்வயலும் விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் நேரில் எம். கந்தசாமி அவர்களை காம்வீதி, ஊர்காவற்றுறையில் சந்திக்கவும். 304

நல்ல திறமான முற்றிய மவுக்கினி மரங்களில் அரியப்பட்ட அகலம் நீளம் கொண்ட மவுக்கினி பலகைகள் விற்பனைக்கிருக்கிறது. தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். காசிப்பிள்ளை மரக்காலை, 5ம் நம்பர், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 301

ஆறுபரப்பு 3 அறை மத்திம வீடு விற்பனைக்குண்டு. மின்சாரவசதி, கிணறு. உடுவில் மகளிர் பாடசாலைக்கு அருகாமையில்ரூபா30000/- திருமதி K. B. இராசரெத்தினம் 'தயாளன்' உடுவில் 309

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுப்பிட்டி கொலை முயற்சி வழக்கில் எதிரி விடுதலை

வாழ்ப்பாணம், சனி

சிறுப்பிட்டி கொலைமுயற்சி வழக்கில் எதிரியான பொன்னையா செல்லையா விடுதலை செய்யப்பட்டார். இவ்வழக்கில் முதலாவது சாட்சியான பூதத்தம்பி சாட்சியமளித்துக்கொண்டிருந்த சமயம் ஜூரிகள் சபைத் தலைவர் விசாரணையை தொடர்ந்து நடத்த விரும்பவில்லை எனத் தெரிவித்தார். அதன்பின் எதிரி எக்குற்றச்சாட்டுக்களுக்கும் குற்றவாளி அல்லவென ஜூரிசபையினர் ஏகமனதாகத் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து நீதியரசர் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ்நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு. ஸி. முன்னியில் நேற்றுக்காலை விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 1963ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ந் தேதி சிறுப்பிட்டியில் பொன்னையா செல்லையா என்பவர், சரவணமுத்து கந்தையா என்பவரை டிராக்டரினால் மோதிக் கொலைசெய்ய முயற்சித்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது

எதிரி சார்பில் அட்வக்கேட் திரு. ரி. கணேசலிங்கம் திருவாளர்கள் எஸ் கனகரத்தினம், ஆர் விஸ்வநாதன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். முடிக்குரிய வழக்கறிஞர் திரு ஜி பி எஸ் ரி சில்வா வழக்கை நடத்தினார்.

பூதத்தம்பி கார்த்திகேசு சாட்சியமளிக்கையில் கூறியதாவது: எனது வயது எழுபதுக்கும் எழுபத்துநாலுக்கும் இடையிலிருக்கும். சம்பவம் நடந்த தினம் நான் சிறுப்பிட்டியில் வாழ்ந்தேன் அன்றுமாலை 4 மணிக்கு எனது தோட்டத்தில் பசளை பரவிக் கொண்டிருந்தேன். அப்பொழுது சத்தம் கேட்டது. நான்பார்த்தபொழுது செல்லத்துரை ஓட்டிவந்த டிராக்டர் கமுகு மரத்தை மோதி விழுத்தியது. கந்தையா முன்னால் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். நான் சென்று ஏன் கமுகு மரத்தை மோதினாய்? என்று கேட்டேன்.

நீதி: கமுகுமரம் உமது காணியில் நின்றதா?

சாட்சி: எனது காணியில் தான் நின்றது. எனது மகன் ராஜரத்தினம் அச்சமயம் ஓடிவந்தார். எதிரி தனது டிராக்டரின் முன்பகுதியைப் பார்த்தார்.

நீதி: கமுகு மரம் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட பொருளாக இங்கு கொண்டு வரப்பட்டதா?

முடி. வழக்: இல்லை.

சாட்சி: சம்பவம் நடந்த இடத்திற்கு விதானையார் வந்தார். அன்றிரவு பொலிஸுக்கு வாக்குமூலம் அளித்தேன்.

எதிரியின் வழக்கறிஞர் குறுக்குவிசாரணைசெய்தார்.

வழக்: விதானையார் வீட்டிற்கும், சம்பவம் நடந்த இடத்திற்குமிடையில் எவ்வளவுதூரம்?

சாட்சி: கால் கட்டைக்கு மேலே, அரைக் கட்டைக்குள்ளே.

வழக்: விதானையாருக்கு என்ன கூறினீர்?

சாட்சி: டிராக்டரினால் கமுகமரத்தை மோதி விழுத்தியதாக.

நீதி: கந்தையாவை டிராக்டரால் மோதச்சென்றது உமக்குத் தெரியும்—ஆம்.

நீதி: ஏன் அந்தவிஷயத்தை விதானையாரிடம் சொல்லவில்லை—, அவர் பிறகுசொல்லச்சொன்னார்.

நீதி: கமுகமரம் முறிந்தபடியால்தான் நீர் விதானையாரிடம் போனீர்?. ஆம்

நீதி: இல்லாவிடில் போயிருக்கமாட்டீர்?- ஆம்.

நீதி: அந்த ஆத்திரத்தில் எதிரிக்கு எதிராக வழக்கை உருவாக்கினீர், யாழ்ப்பாணத்தைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். கமுகமரத்தை விழுத்தியது சிவில்வழக்கிற்குரிய விஷயம். ஒருவரை டிருக்டரால் கலைத்து கொலைசெய்ய முயற்சித்தது பாரதூரமான குற்றம், அதை நீர் விதானையாருக்குக் கூறவில்லை. முறைப்பாடு கொடுத்தால் சிவில் வழக்கு வைக்கலாமென்று உமக்குத் தெரியும்.

சாட்சி: ஆம் வரிசையாக எட்டுகமுக மரங்கள் நின்றது, அதில் ஒரு மரத்தை விழுத்தினார்,

---

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறிவிட்டபின் இப்படித் தானென்று தெரியவந்தது.

தனிப்பட்டவர்களிடமிருந்து எல்லாப் பள்ளிக்கூடங்களையும் ஏககாலத்தில் பொறுப்பேற்ற அரசாங்கத்துக்கு இதையெல்லாம் சமாளிக்கமுடியாது இருப்பதில் வியப்பில்லை. இதைப் பற்றி எழுதி, பணமும் 'சாங்ஷன்' ஆகியிருப்பதாகஅறிந்தேன். ஆனால் எப்போது நிறைவேறப்போகிறதோ!

இதில் ஆங்காங்கே பொதுமக்கள் அலட்சியமாக இருக்கப்படாது. தங்களுடைய அருமைக்குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கூடம் நன்றாக இருக்கப் பெற்றோர்கள் கூடுமான உதவியைச் செய்ய முன்வரவேண்டும். எல்லாம் அரசாங்கம் தான் செய்யவேண்டுமென்று அசமந்தமாக இருப்பின் முதலில் கஷ்டப்படுவது நம் குழந்தைகள்தான்.

போதிய வசதிகள் இல்லாவிட்டால், ஆசிரியர்கள் எவ்விதம் உற்சாகமாக மாணவர்களுக்குக் கற்பிக்க முடியும்? பள்ளிக்கூடம் வசதியாகவும், வசீகரமாகவும் இருந்தாலே குழந்தைகளும் ஆவலுடன் அங்கு சென்று கற்கமுடியும்.

'பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம்' என்றார் அமரகவி பாரதியார். நமது பள்ளிக்கூடங்களை, நம் கோயிலைவிடச் சுத்தமாகவும் மேலான முறையிலும் வைத்திருக்கப் பொதுமக்கள் முன்வரவேண்டும். ஊருக்குப் பெருமையளிப்பவை நம் கோவில்களும் பள்ளிக்கூடங்களுமே அல்லவா?

ஃ ஃ ஃ

ஆவியாய் அவியுமாகி
அருக்கமாய்ப் பெருக்கமாகிப், பாவியர் பாவந்தீர்க்கும் பரமனாய்ப் பிரமனாகிக்,
காவியங்கண்ணளாகிக்கடல்வண்ணமாகிநின்ற, தேவியைப்பாகம் வைத்தார் திருப்பயற்றூரனாரே.

— அப்பர்சுவாமிகள்

---

## 7 விமானங்கள் வீழ்த்தப்பட்டன

ஹானோய், மே 6

வடவியட்னாம் உயரே நேற்று 7 அமெரிக்க விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாய் அறிவிக்கப்பட்டது.

---

## புனித மரத்தில் விஷத்தேனீ

கயா, மே 6

புத்தர் பெருமான் ஞானம் பெற்ற புனித அரசமரத்தை தமது வாசஸ்தலமாகக் கொண்டிருக்கும் ஒரு தேனீக் கூட்டம் இலங்கை, தாய்லந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிக்குகளைத் தாக்கியது

இந்த மரத்தினடியில் தான், கௌதமர் ஞானோதயம் பெற்றார். மகாபோதி ஆலயத்தில் புத்த ஜயந்தி கொண்டாட்டத்தின்போது பிக்குகள் பிரார்த்தனை நடத்திய சமயம், இச்சம்பவம் நடைபெற்றது.

பிக்குணி ஒருவர் மெழுகுதிரிஒன்றைக் கொளுத்த முயன்றபோது, தேனீகள் தாக்கவே. தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்காக அவர் ஓடினார் (பி டி ஐ)

---

## 'சமயவளர்ச்சிக்கு ஊக்கம் வேண்டும்'

கோண்டாவில், வெள்ளி

''சமயங்கள் பலவற்றிலும் தொன்மையான சமயம் இந்துசமயமாகும். அப்பேற்பட்ட சமயத்தை வளர்ப்பதில் சைவராகப் பிறந்த ஒவ்வொருவரும் ஈடுபடவேண்டும். கிராமங்கள் தோறுமுள்ள இந்து சமய அபிவிருத்திச் சங்கங்கள் விழாக்கள் எடுப்பதோடு மாத்திரம் நின்றுவிடாது சைவ வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டும்''.

இணுவில் - கோண்டாவில் காரைக்கால் சிவன்கோவில் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தியாக சத்திய சீவன சன்மார்க்க இயக்கத்தின் காரைக்கால் கிளையின் பௌர்ணமிக் கூட்டத்திற்கு தலைமை வகித்த திரு. ச. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் திருவை. தியாகராசா கோஷ்டியினரின் கூட்டுப்பிரார்த்தனை இடம்பெற்றது. திருவாளர்கள் பரமநாதன், ந. கமலநாதன், இ. இலிங்கரத்தினம் ஆகியோர் பேசினர்.

---

## 'ஈழநாடு' சூறுவளி மாதாந்த உதவி

யாழ்ப்பாணம், சனி

'ஈழநாடு' சூறுவளி கஷ்ட நிவாரண மாதாந்த உதவித் திட்டத்தின்கீழ் நெல்லியடியைச்சேர்ந்த ஒரன்பர் வைகாசிமாதத் திட்டத்திற்குரிய 25 ரூபாவை காசோலை மூலம் அனுப்பியுள்ளார்.

---

## கார் மோதி மரணம்

மாத்தறை, வெள்ளி

குணவதி என்ற 4 வயது சிறுமி தெனியா — மாத்தறை தெருவைக் கடந்து செல்லும்பொழுது, கார் ஒன்றினால் மோதப்பட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல முன்னரே ஸ்தலத்தில் மரணமானார்.

---

## மூக்குகண்ணாடி யாருடையது?

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் கச்சேரியிலிருந்து யாழ்ப்பாணம்புகையிரத ஸ்தானத்துக்குவரும் தண்டவாளப்பாதைக்கு அருகாமையில் திரு க இரத்தினவேல் என்பவரால்ஒருமூக்குகண்ணாடி கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளலாம்.

---

# "இந்து பல்கலைக்கழக கோரிக்கை அர்த்தமற்றது"

## உடுவில் எம். பி. பேச்சு

யாழ்ப்பாணம், சனி

''தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் இன்னும் பூரண உரிமை கிடைக்காவிட்டாலும், எந்த இடத்தில் வாழ்பவனாக இருந்தாலும் தன் தாய்மொழியில் அரசாங்கத்துடன்தொடர்பு கொள்ளக்கூடிய சுதந்திரமாவது கிடைத்திருக்கிறது''

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் எம் பி, வண்ணார் பண்ணையில் நடந்த தமிழரசுக்கட்சிக் கிளை அலுவலகத் திறப்பு விழாவில் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தலைமையில் மேற்படிவிழா நடைபெற்றது. திரு செல்வநாயகம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

கடந்த ஐந்து ஆண்டு காலத்துக்குள் இந்த நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களுக்கு தமிழரசுக் கட்சி தான் காரணமாக இருந்ததென்பதை யாராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. யு. என். பி. யாளருடன் நாம் குறைந்தபட்சக் கோரிக்கைக்காக சேர்ந்துகொண்டாலும், அந்தச்சலுகைகள் எமக்கு வழங்கப்பட்டே வருகின்றன.

உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில், தமிழ் பேசும் சமூகத்தில் பல மதத்தைச் சேர்ந்தவர்கள் இருப்பதனால் இந்துப் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவித்தரும்படி கேட்பது அர்த்தமற்றதொன்று என்றுசொன்னார். செனட்டர் நடராசா உட்பட வேறுபலரும் பேசினர். திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் புதிய அலுவலகத்தைத் திறந்துவைத்தார்.

---

## வினாத்தாள்களினால்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ளைத் திரும்பவும் மாணவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனரென்றும் வினாத்தாள்களில் எழுத்துக்கள் சரியாகப் பொறிக்கப் படாமலும் விளக்கமில்லாமலும் இருந்தமையே இவ்வாறு குறித்த பரீட்சை நடைபெறுவதற்குத் தடையாக இருந்ததெனச் சொல்லப் படுகிறது.

வினாத்தாள்களை அனுப்பி வைத்த தொழில் நுட்பக்கல்லூரிப் பரீட்சைத் திணைக்களத்தினர் சரியான முறைப்படி வினாத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளனவா என்பதைக் கவனிக்கத் தவறியமையையிட்டு மாணவர்கள் மிகவும் அதிருப்தி தெரிவித்தனர்.

இப்பரீட்சை மீண்டும்இம்மாதம் 12-ம்,13-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக மேற்படி தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் திரு. ராஜலிங்கம் தெரிவித்தார்.

---

## யாழ்ப்பாண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படக்காட்சி முடிவடையவேண்டும். திரைப்படம் நீடிக்குமானால் விசேஷ அனுமதி மேயரிடமிருந்து பெறவேண்டும். ○ புகைப்பது தடைசெய்யப்படவேண்டும். புகைப்பவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு 100 ரூபாவரை அபராதம் வழங்குவது. இது சம்பந்தமாக தியேட்டர்களில் அடிக்கடி விளம்பரங்கள் வெளியிடுவது. 'சிலைட்' காண்பிப்பது. ○ படம் பார்க்க வருபவர்களின் ''கியூ'' வரிசை தியேட்டருக்கு வெளியே இருக்கக்கூடாது. அவர்கள் தியேட்டர் வளவுக்குள்ளே அனுமதிக்கப்படுவதுடன் குறிப்பிட்ட தொகையினருக்கு மட்டும் டிக்கட்டுகள் வழங்க வேண்டும். ○ ஆசனங்களுக்கு மூட்டைப் பூச்சி மருந்து அடிக்கடி தெளிக்க வேண்டும்.

இத்தீர்மானங்கள் விரைவில் அமுலாக்கப்படும் எனத் தெரியவருகிறது. இதற்கு தியேட்டர் மனேஜர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

---

## நாடு விரும்பினால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காமன்வெல்த் சட்ட மந்திரிகள் மகாநாட்டில்கலந்துகொள்ள வந்திருக்கும் இலங்கை நிதிமந்திரிக்கு தூதர் மல்லசேகரா அளித்த விருந்தில் சர் ஜோன் கலந்துகொண்டார்.

முன்னாள் கவர்னர் ஜெனரல் சர் ஒலிவர் குணத்திலகா, பிரபல பிரிட்டிஷ் கியூ ஸிக்கள் ஆகியோர் விருந்துக்கு வந்திருந்தனர்.

---

## இன்று நடக்கும் வருடாந்த விழா

மாங்குளம், வெள்ளி

பாஷையூர் தேனருவி நாடகமன்றத்தின் வருடாந்தவிழா நாளை பாஷையூர் அர்ச். அந்தோனியார் விளையாட்டுமைதானத்தில் இடம் பெறும். விழாவுக்கு இ. ஜே இளையதம்பி தலைமை வகிப்பார்.

அன்றைய கலை நிகழ்ச்சியாக, நாடகங்களும் இடம் பெறும்.

---

## அசைஸ் விசாரணை

யாழ்ப்பாணம், சனி

வடபகுதி அசைஸ்நீதிமன்றத்தின் இரண்டாவது வழக்கு விசாரணை நீதியரசர் டாக்டர் ஏச் டபிள்யு தம்பையா முன்னிலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-15 மணிக்கு ஆரம்பமாகும். இன்று விசாரணை நடைபெறுது.

## வழக்குகள்

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தின் முதலாவது பருவகால விசாரணை நேற்றுக்காலை 11 மணிக்கு நீதியரசர் டாக்டர் ஏச் டபிள்யு தம்பையா முன்னிலையில் ஆரம்பமான போது வடபகுதி பிஸ்கால் அதிகாரி திரு வேர்ணன் அபயசேகரா இந்தப் பருவக் கால விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் வழக்கு விபரங்களை நீதியரசரிடம் கையளித்தார்.

பருவகால விசாரணை ஆரம்பமாவதற்கு முன்னதாக நீதியரசர் றிமர் மண்டபத்துக்குச் சென்று வழிபட்டுக்கொண்டு யாழ். நகரமண்டபத்தை வந்தடைந்தார்.

இந்தப்பருவகால விசாரணையில் 17கொலை வழக்குகளும், 2 கொலைமுயற்சி வழக்குகளும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

---


## வாடகைக்கு

சுதுமலையில், மானிப்பாய்-தாவடி வீதியில் ''பசுபதாபதி இல்லம்'' சகல வசதிகளுடன் கூடிய பெரிய மாடிவீடு நீண்டகால வாடகைக்கு உண்டு. கைத்தறி நெசவு அல்லது 'டியூட்ரி' (Tutory) போன்ற ஸ்தாபனங்களை நடத்துவதற்கு வசதியானது. இம்மாதம் இருபதாம்திகதிக்குள் நேரில் சந்திக்கவும்- திருமதி ப. பூமணி 312


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org